**வரையறுத்த இலங்கை திறீபோச கம்பனி - 2022**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வரையறுத்த இலங்கை திறீபோச கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும்.

எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்ப்படுத்துதல், உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கிய வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்கல் பொறுப்பினை பேணுதல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினை பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசங்கள் காணப்படுமாயின் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவு ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறையானது நிறுவனத்தினால் பேணுவது அத்தியவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 61 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடல் காலப்பகுதியின் பின்னர் உருவாகும் 12 மாத காலப்பகுதியின் போது அறவீடுசெய்வதற்கு அல்லது செலுத்துவதற்கு நியர்ணயிக்கப்பட்ட பணம் நடைமுறைச் சொத்துக்கள், மற்றும் பொறுப்புக்களின் கீழும் 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியின் போது அறவீடு செய்வதற்கு அல்லது செலுத்துவதற்கு உள்ள பணம் நடைமுறையற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கீழும் தனித்தனியாகக் காட்டப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் ஊழியர்களிடமிருந்து அறவீடு செய்ய வேண்டியிருந்த ரூபா 81,281,167 தொகையான முழுமையான வீடமைப்புக் கடன்கள் மற்றும் இடர் கடன்கள் நடைமுறைச் சொத்துக்களின் கீழும் ரூபா 79,162,809 தொகையான ஊழியர் பணிக்கொடைக்கான ஒதுக்கங்கள் முழுவதும் நடைமுறையற்ற பொறுப்புக்களின் கீழும் காட்டப்பட்டிருந்தன. | கணக்காய்வாளரினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு இக்கடன்கள் நடைமுறையற்ற சொத்துக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்களாக தனித்தனியாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிதிக்கூற்றுக்களைச் தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் 57 (ன) பந்தியின் பிரகாரம் ஆண்டின் போது ஊழியர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிக்கொடைச் செலவுகள் ரூபா 4,890,967 அதற்காக கணிப்பீடு செய்யப்பட்ட வட்டிச் செலவுகள் ரூபா 5,946,130 மற்றும் கணிப்பீடு செய்யப்பட்ட மிகைகள் ரூபா 7,120,719 என்பன இலாப நட்ட கூற்றில் தனித்தனியாகச் சுட்டிக் காட்டப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் மேற்கூறிய கணிப்பீடுகளின் தேறிய பெறுமதி மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1.3.1(ய) இல் ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது 60 ஆகக் காட்டப்பட்டிருந்தும் 62 வயதினைப் பூர்த்தி செய்த 04 ஊழியர்களுக்காக பணிக்கொடை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு பணிக்கொடை செலவுகளை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 55 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய மட்டத்திற்கு மாறிய திகதியிலிருந்து பெறுமானத் தேய்வு செய்தல் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 207,680,030 கிரயமான கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மீளாய்வாண்டின் போது பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | இச்சொத்துக்கள் பயன்படுத்தக்கூடிய மட்டத்திற்கு உருவாகியிருந்தும் மூலப்பொருள் பற்றாக்குறையின் காரணமாக பயன்படுத்துதல் ஆரம்பிக்கப்படாததனால் 2022 ஆம் ஆண்டில் பெறுமானத் தேய்வு செய்யப்படவில்லை | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு கானப்பட்ட விற்பனைப் பெறுமதியுடனான 34,877.5 கிலோகிராம் பயனற்ற திறீபோசாவுக்காக ரூபா 7,753,966 மற்றும் 13,328 கிலோ கிராம் பயனற்ற திறீபோசாவுக்காக ரூபா 4,062,521 ஆக மொத்தமாக ரூபா 11,816,487 தொகையான இருப்பு சேதமடைந்தமைக்காக நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கல் செய்யப்பட்டிருக்காததுடன் இந்த பயனற்ற திறீபோசாக்களை உள்ளடக்கி இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து திருப்பி அனுப்பிய 8,903.25 கிலோ கிராம் இருப்பின் விற்பனைப் பெறுமதியான ரூபா 4,820,576 பணத்திற்காக நிதிக்கூற்றுகளில் செம்மையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022-12-31 இல் உள்ளவாறு பயனற்ற திறீபோசாவாக உள்ளபடியாக நிறையிடப்பட்டு இனங்கானப்பட்ட மொத்த அளவு 212,850 கிலோ கிராம் ஆனதுடன் அந்த இருப்பு விற்பனை செய்த சந்தர்ப்பத்தில் ஒரு வருமானமாக இனங்காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியால் மீளாய்வாண்டில் உற்பத்தி நடைமுறையின் போது இனங்காணப்பட்ட விற்பனைப் பெறுமதி கொண்ட 117,785 கிலோகிராம் பயனற்றவைகளில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 19,010 கிலோகிராம் பயனற்ற கையிருப்பின் விற்பனைப் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த பயனற்றவைகளுக்கு நிதிப் பெறுமதி இல்லாததனால் பெறுமதியை உறுதியாக மதிப்பீடு செய்ய முடியாத போதிலும் கைதவிர்ப்புச் செய்யலாம் என்பதாகும். | விற்பனைப் பெறுமதியுடனான பயனற்றவைகளை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியிடம் உள்ள நிலையான வைப்புக்கள் ரூபா 273,939,324 கூட்டுமொத்தமாக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 291,252,335 ஆகக் காட்டப்பட்டிருந்ததனால் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 17,313,010 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கம்பனியால் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆண்டிற்கான வட்டி வருமானமானது அட்டுறு அடிப்படையில் கணிப்பிடப்பட்டு உரிய நிலையான வைப்புக்களின் பெறுமதிக்கு மூலதனமாக்குவதன் மூலம் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டது. அடுத்துவரும் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் திரவத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு நிலையான வைப்புக்களின் பெறுமதி மற்றும் பெறவேண்டிய வட்டி வருமானத்தை தனித்தனியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய வட்டி வருமானத்தினை தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையில் வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | திறைசேரி உண்டியல்களுக்காக கிடைக்க வேண்டிய வட்டி வருமானமாகிய ரூபா 1,276,635 தொகையை திறைசேரி உண்டியல் கணக்கிற்கு செம்மையாக்கியதன் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் திறைசேரி உண்டியல்களின் பெறுமதி அதற்குச் சமமான பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் பெறவேண்டிய வட்டி வருமானக் கணக்கும் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பெறவேண்டிய வட்டி வருமானமானது திறைசேரி உண்டியல் கணக்கிற்கு செம்மையாக்கப்பட்டது. அடுத்துவரும் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களானது திரவத்தன்மை அடிப்படையாகக் கொண்டு திறைசேரி உண்டியல்களின் பெறுமதியையும் பெறவேண்டிய வட்டி வருமானத்தையும் தனித்தனியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய வட்டியை தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையில் வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் 20(1) மற்றும் 20(2) ஆம் பிரிவுகள் | முறையான வரி இன்வொயிசினைப் பெற்றுக்கொள்ளாது 39 சந்தர்ப்பங்களின் போது ரூபா 12,892,885 கூட்டு மொத்தமான பெறுமதி சேர் வரிப்பணம் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | அந்த நிறுவனங்களினால் தற்போது முறைப்படியாக வரி இன்வொயிசினை வழங்குதல் இடம் பெறுகின்றது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறைப்படியான வரி இன்வொயிஸ் இல்லாது செலுத்தப்பட்ட பணத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது என்பதனை உறுதிப்படுத்தும் ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதி அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அரசாங்க தொழில்முயற்சிகளுக்கான நிறுவகரீதியான வழிகாட்டிக் கோவை மற்றும் செயற்பாட்டுக் கையேடு | | | | |
| | (i) | வழிகாட்டிக் கோவையின் 7.5 ஆம் பந்தி | ஒரு நிறுவனத்தினால் காலாண்டு ரீதியாக அரையாண்டு ரீதியாக மற்றும் வருடாந்தம் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியதுடன் செயலாற்றல் அறிக்கையானது உரிய வரிசை அமைச்சிற்கும் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் செயலாற்றல் அறிக்கையானது தயாரித்து சமர்ப்பிக்கப்படவில்லை. | மாதாந்த செயலாற்றல் தொடர்பான ஒரு அறிக்கையானது சுகாதார அமைச்சு உத்தியோகத்தர்களையும் நிதி அமைச்சின் பிரதி நிதிகளையும் உள்ளடக்கிய பணிப்பாளர்கள் சபைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. கணக்காய்வு சிபாரிசின் பிரகாரம் மற்றும் உரிய வழிகாட்டிக் கோவைகளின் பிரகாரம் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்திற்கு எதிர்காலத்தில் அந்த செயலாற்றல் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | செயற்பாட்டுக் கையேட்டின் 3.2 (எ) ஆம் பந்தி | ஊக்குவிப்பு படிகளைச் செலுத்தும் போது அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி சுபோச விற்பனையிலிருந்து இலக்கிடப்பட்ட படியாக | 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட சுபோச உற்பத்தியுடன் கம்பனி இலாபம் உழைப்பதற்கு விரும்பியிருந்ததுடன் ஊழியர் ஆவலினை முன்னிட்டு இலாபத்தில் 10 சதவீத பணத்தினை வரிசை அமைச்சுக்கு | செயற்பாட்டுக் கையேட்டில் காட்டப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கம்பனியின் அனைத்து ஊழியர்களுக்குமாக மீளாய்வாண்டின் போது ரூபா 12,698,290 ஊக்குவிப்பு படிப்பணம் செலுத்தப்பட்டது.

பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்கும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கும் உட்பட்டு வருடாந்தம் பதவியணியினருக்கு வழங்கப்பட்டது. இந்த ஊக்குவிப்புப் படியினை செலுத்தலினை முறைமைப்படுத்த வேண்டியிருந்ததனால் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அதன் போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட வாய்மொழி மூலமான அறிவுறுத்தல் மற்றும் இணக்கப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு 2021 ஆம் ஆண்டிலிருந்து கம்பனியால் மாதாந்தம் சுபோச உற்பத்தி இலக்கினை முன் அறிந்து அந்த உற்பத்தி இலக்கின் அடிப்படையில் மாதாந்த படியினை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. கணக்காய்வாளரினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து உரிய எழுத்துமூல அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ை ஆம் பந்தி | சம்பளம் மற்றும் படிகள் தொடர்பாக தீர்மனம் எடுக்கும் அதிகாரம் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மேலதிக கொடுப்பனவுகளாக மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து படிகளுக்குமாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் பின்வரும் படிகள் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டன. | | |
| | | (i) 2017 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்ட சுபோச உற்பத்திக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமையாளருக்கு ரூபா 10,000 மேலதிக படியானது சுபோச கணக்கிலிருந்து பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 120,000 செலவு செய்யப்பட்டிருந்தது. | கம்பனி முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு கம்பனியாக பதிவு செய்யப்பட்டிருந்தும் தற்பொழுது திறைசேரியின் நிதி ஏற்பட்டின் மீது தங்கியிருக்கும் ஒரு அரசாங்க தொழில் முயற்சி இல்லை விசேட சந்தர்ப்பத்தின் போது மூலதன நிதி ஏற்பாட்டிற்காக பங்களிப்புச் செய்யப்பட்டிருந்தும் 2021 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மூலதன நிதி ஏற்பாடு வழங்கப்பட வில்லை. எனவே வணிகரீதியான உற்பத்தியாகிய சுபோச விற்பனையை மேம்படுத்துவதனை முன்னிட்டு உரிய முகாமைத்துவத்திற்கு சுபோச கணக்கிலிருந்து பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் உரிய படிகள் செலுத்தப்பட்டன. | சுற்றிக்கை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | | (ii) 2022 சனவரி 18 ஆந் திகதிய 02/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் | கம்பனி நாளின் 24 மணித்தியாலங்களும் உற்பத்தி நடவடிக்கைகளை | சுற்றிக்கை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் பிரகாரம் தொலைபேசி படிகளுக்கு தகமையற்ற கம்பனியின் மூன்றாம் மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு 2019 மார்ச் 14 ஆந் திகதியிலிருந்தும் ஆயு 1-1 மற்றும் ஆயு 2-1 ஆம் பதவிகளில் சேவையாற்றுகின்ற 07 உத்தியோகத்தர்களுக்கு 2019 யூலை 15 ஆந் திகதியிலிருந்தும் மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் ரூபா 1,000 மாதாந்த தொலைபேசி படியானது பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டது. | தொடர்ச்சியாக மேற்கொள்கின்ற ஒரு நிறுவனம் என்பதனால் இந்த உத்தியோகத்தர்கள் கடமையை பூர்த்திசெய்து சென்றாலும் அவர்களை சில சந்தர்ப்பங்களில் தொலைபேசியினூடாக தொடர்புகொள்ள வேண்டி ஏற்படல். மேலும் கடமை நடவடிக்கைகளுக்காக ஏனைய நிறுவனங்களுக்கு செல்கையில் நிறுவனத்துடன் தொடர்புகொள்ள வேண்டி ஏற்படுவதனால் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் பேரில் ரூபா 1,000 உச்ச அளவிற்கு உட்பட்டு மாதாந்த தொலைசேி செலவுகள் மீளளிப்புச் செய்யப்படுகின்றது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2022 சனவரி 14 ஆந் திகதிய 01/2015 (ii) ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தகமை பெற்றிருக்காத 05 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 12,000 மாதாந்த போக்குவரத்து படியாக ரூபா 720,000 மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டது. | 2015/05/25 ஆந் திகதிய 1/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் கீழ் குழு போக்குவரத்து வசதிகளுக்கு தகமையுள்ள மத்திய மட்டத்திலுள்ள முகாமையாளர்களுக்கு கம்பனியின் மூலம் குழு போக்குவரத்து வசதிகளை வழங்கும் போதான கிரய நலன் பகுப்பாய்வின் பிரகாரம் மற்றும் நாளின் 24 மணித்தியாலங்களும் 02 வேலை நேரங்களின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற ஒரு உற்பத்தி நிறுவனமாக இருப்பதனால் உரிய முகாமையாளருக்கு பணிப்பாளர்கள் சவபையின் | சுற்றிக்கை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அங்கீகாரத்தின் பிரகாரம் எரிபொருள் படிகள் செலுத்தப்பட்டன. | |
| (ஈ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை | | | | |
| | (i) | 4.2.2 (அ) ஆம் பந்தி | பெறுகை ஆரம்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்திலிருந்து முடிவடையும் வரை ஒவ்வொரு பெறுகை நடைமுறையின் கட்டங்களை முறைப்படியாக விபரிக்கின்ற ஒரு பதிவேடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் அவ்வாறு தயாரிக்கப்படவில்லை. | கணக்காய்வு சிபாரிசின் படி ஒவ்வொரு பெறுகை தொடர்பாக பொழிப்பாக்கிய ஒரு பதிவேட்டினை தயரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | 2017 மார்ச் 15 ஆந் திகதிய 32 ஆம் இலக்க திருத்திய வழி காட்டிக் கோவை யின் 2.9.1 பந்தி | பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிவுறுத்திய பெறுகைகளுக்காக முழுப் பணமும் செலுத்தப்படலாம் என்ற போதிலும் கம்பனியின் நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதியினைக் கொண்ட ஒரு பெறுகைத் திட்டம் இல்லாதிருந்தும் மீளாய்வாண்டின் போது 45 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,497,000 தொகை பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தர்கர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. | தற்பொழுது ஒவ்வொரு பெறுகைக்காக பெறுகைக் கால அட்டவணை அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் ஊபுஜசு/2021/02-02-2021 ஆம் இலக்க 2021 ஏப்ரல் 09 ஆந் திகதிய கடிதம் | | ஒவ்வொரு நிறுவனத்தினாலும் வழங்குனர்களுக்கு பெறுமதி சேர் வரி கொடுப்பனவு தொடர்பான விபரங்களானது மின் அஞ்சல் மூலம் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு உரிய மின் அஞ்சல்கள் மூலம் பெறுமதி சேர் வரி விபரங்கள் தற்பொழுது அனுப்பிவைக்கப்படுகின்றன. | உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் கடிதத்திலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அனைத்து அறிக்கைகளும் உள்நாட்டு இறைவரி |

| | | |
|---|---|---|
| | | திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும் எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 48,310,073 நட்டமாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 105,520,305 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 153,830,378 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு உற்பத்தி இருப்பானது காலாவதியாகுவதன் அடிப்படையில் உருவாகியது இருப்பு நட்டம் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகுதியான இறுங்கு, சோளம், பால் மா, எரிபொருள் போன்ற மூலப் பொருட்களின் இறுதி இருப்பு மட்டமானது ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட இருப்பில் 20 சதவீதத்திற்கு மேல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டிருந்தும் விடமின்களின் மிகுதி இருப்பானது ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட இருப்பில் 72 சதவீதம் ஆகிய பெறுமதியில் காணப்பட்டது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 5,425 கிலோ கிராம் விடமின் இருப்புக்களில் ரூபா 4,973,072 கிரயமான 4,425 கிலோகிராம்கள் 2022 ஆம் ஆண்டில் காலாவதியாகியிருந்தன. | திரிபோச உற்பத்திக்காக ஈடுபடுத்தப்படுகின்ற விடமின் பிரீமிக்ஸ் ஆனது உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்ய முடியாததனால் இறக்குமதி செய்கின்ற வழங்குனர்களிடமிருந்து வருடாந்த தேவைப்பாட்டிற்கு இணங்க ஒரே தடவையில் அல்லது இரண்டு தடவைகளில் கொள்வனவு செய்யப்படுவதாவது உரிய கட்டளைகளை வழங்கி ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் இருப்பு கிடைப்பதற்கு எடுத்தல் மற்றும் அந்த உற்பத்தியானது இலங்கை திரிபோச கம்பனிக்கு மாத்திரம் உற்பத்தி செய்கின்ற உற்பத்திப் பொருளாக இருத்தல் என்பதன் அடிப்படையிலாகும். | ஏனைய மூலப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்குள்ள இயலுமையினை முன் அறிந்து அதற்கிணங்க விடமின் பால் மா, எரிபொருள் இருப்பு என்பவற்றை கொள்வனவு செய்து காலாவதியாகுவதனால் ஏற்படும் நட்டத்தை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருடாந்த இருப்பு மீளாய்வின் பிரகாரம் அத்திகதியில் மிகுதியாக உள்ள திறீபோச இருப்பு 180,765 கிலோகிராம்களாக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறீபோசாவின் மிகுதி இருப்பு 4,477.5 கிலோ கிராம் ஆகும். மிகுதியான 176,287.5 கிலோகிராம் திறீபோச இருப்பு குறுங்காலத்தில் காலாவதியாகியதன் (ளுாழசவ நுஓிசைநன) அடிப்படையில் பயனற்றவைகளாக இனங்காணப்பட்டிருந்தும் அந்த திறீபோச இருப்பானது 2023 மே மாதமளவில் கம்பனியின் களஞ்சியத்தில் மிகுதியாகக் காணப்பட்டது. | இவ்வாறு திறீபோச அதிக அளவில் பயனற்றவையாக அகற்ற வேண்டி ஏற்பட்டது முதல் தடவையாகும். இவ்வாறு பயனற்றதாக இனங்காணப்பட்ட இருப்பில் தற்பொழுது 80 சதவீதம் அளவில் பயனற்றவையாக விற்பனை செய்து முடிவடைந்துள்ளதுடன் மிகுதி இருப்பினையும் பயனற்றவையாக விற்பனை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | பயனற்றதாகுவதனை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உரிய பயனற்றவைகளை துரிதமாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சிறந்த உற்பத்தி நடைமுறைகளுக்காக ஆகக் குறைந்தது 14 நாட்களுக்குத் தேவையான சோயா போஞ்சி, இறுங்கு என்பன களஞ்சியத்தில் வைத்திருக்க வேண்டிய போதிலும் தற்பொழுது கம்பனியிடம் பண்டகசாலைகளின் (களஞ்சியத்தின்) ஒட்டுமொத்த இயலளவு 300 மெட்ரிக் தொன்களாக உள்ளதுடன் இது 03 நாட்கள் அளவிலான உற்பத்தி நடவடிக்கைகளுக்காக போதுமானது என்பதனால் களஞ்சிய வசதிகளை விரிவுபடுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டில் மேலதிக நிதி ஏற்பாடுகளை வழங்குவதற்கு தேசிய பெறுகை திணைக்களத்திடமிருந்தும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் 2023 மே 10 ஆந் திகதி வரையும் அந்த வசதிகளை விரிவுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. | 2021 பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட மூலதனச் செலவுத் திட்டத்திற்காக தேசிய பெறுகைத் திணைக்களத்தின் இணக்கப்பாடு வெளிப்படுத்தப்பட்டு தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு அது அனுப்பிவைக்கப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு அந்த வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் நாட்டின் தற்போதைய பொருளாதார சிக்கலினை முன்னிட்டு உரிய நிதி ஏற்பாடு கம்பனிக்கு கிடைத்திருக்கவில்லை. | களஞ்சிய வசதிகளை அதிகரிப்பதற்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கம்பனியின் உற்பத்திப் பொருட்களுக்காக இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உணவு உற்பத்தி மற்றும் பாதுகாத்தல் தொடர்பான ஐளுழு 22000 தரச் சான்றிதழ் மற்றும் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்திடமிருந்து சர்வதேச சான்றிதழினைப் பெற்றுக்கொள்ளுதல் 2023 மார்ச் 27 ஆந் திகதி வரை இடம்பெற்றிருக்கவில்லை. | தற்பொழுது இதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இதற்குத் தேவையான மூலன நிதி ஏற்பாட்டின் பற்றாக்குறை காரணமாக இதனைப் பெற்றுக்கொள்வதற்கு தாமதமடைந்துள்ளது. உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமும் இதற்குத் தேவையான மூலதன நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை தொடர்பாகவும் கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது. | துரிதமாக உரிய தரச் சான்றிதழினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | உற்பத்தி சென்முறையின் போது ஒவ்வொரு மூலப் பொருட்களுக்கு ஏற்படக்கூடிய சாதாரண சேதாரங்கள் தொடர்பான சதவீதங்களை நிர்ணயிக்க வேண்டிய போதிலும் கம்பனியால் பயன்படுத்தப்படுகின்ற மூலப்பொருட்களின் பெறுமதியில் உற்பத்தி செயன்முறைகளுக்குள் உற்பத்திக்கு முன்னரும் உற்பத்திக்கு பின்பும் ஏற்படக்கூடிய சாதாரண சேதாரங்கள் எவ்வளவு பெறுமதியானது என்பது தொடர்பாக முன்னறிதல் மேற்கொள்ளப்பட்டிருக்காததனால் சாதாரண சேதாரங்களையும் அசாதாரண சேதாரங்களையும் இனங்காண முடியாதுள்ளது. கம்பனியால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திய ஒட்டுமொத்த மூலப் பொருட்கள் 3,228,715 கிலாகிராம்களாக இருந்ததுடன் மொத்த உற்பத்தி 2,751,863 கிலோகிராம்களாகும். அதற்கிணங்க சேதாரம் 476,852 கிலோ கிராம்களாக இருந்ததுடன் அது மொத்த மூலப் பொருள் உள்ளீட்டில் 14.77 சதவீதமாகும். கம்பனியால் இனங்காணப்பட்ட விற்பனைப் பெறுமதியைக் கொண்ட சேதாரங்கள் 117,785 கிலோகிராம்களாக இருந்ததுடன் இனங்காணப்படாத சேதாரங்கள் 359,067 கிலோ கிராம்களாகும். அது முறையே உள்ளீடு செய்யப்பட்ட மூலப் பொருட்களில் 3.65 சதவீதம் மற்றும் 11.12 சதவீதம் ஆகும். | தொடர்ச்சியாக உற்பத்தி காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மூலப்பொருள் பயன்பாட்டின் சிறந்த மட்டத்தினை அடைந்து கொள்ள முடிவதுடன் அவ்வாறு இல்லாதவிடத்து அசாதாரண இருப்பு பயன்பாடு ஏற்படுகின்றது. யுகடயவழஒைெ மட்டத்தினை தொடர்ச்சியாக பரீட்சித்தலினை ஆரம்பித்தலுடன் சாதாரண சேதாரங்கள் மற்றும் அசாதாரண சேதாரங்களாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உற்பத்தி நடைமுறையின் போது ஏற்படக்கூடிய சாதாரண சேதாரத்தின் சதவீதத்தினை இனங்கண்டு அதற்கிணங்க பகுப்பாய்வு செய்து அசாதாரண சேதாரங்களுக்கான உறுதியாக காரணத்தை இனங்காண்பதற்கும் அந்த அசாதாரண சேதாரத்திற்கான பொறுப்பினை நிர்ணயித்து தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியை தோற்றுவித்த பிரதான நோக்கமாகிய திறீபோசாவினை உற்பத்தி செய்வது தொடர்பாக கம்பனி அதிக ஆர்வம் காட்டியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டதுடன் இந்நிலைமைக்கு பிரதான தாக்கம் ஏற்படுத்தியுள்ளதானது சுபோச உற்பத்திப் பொருள் விற்பனை வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட இலாபத்தில் 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் வரையான இலக்கிடப்பட்ட படியினைச் செலுத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தமை என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க கடந்த ஆண்டுகளில் திறீபோச உற்பத்திக்கு | கம்பனியால் உற்பத்தி செய்யப்படுகின்ற பிரதான உற்பத்திப் பொருளாகிய திறீபோசாவினை உற்பத்தி செய்வதற்காக மேலதிகப் படி.˙.இலக்கிடப்பட்ட படி செலுத்தப்படுவதில்லை. அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் சுபோச உற்பத்தி இலக்கின் அடிப்படையில் ஒரு படியினை வழங்குமாறு அதன் போது | உற்பத்தியினை இலக்காகக் கொண்ட படியினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயிருந்தால் அது கம்பனியின் ஒட்டுமொத்த உற்பத்தி இலக்கினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | நேரொத்த வகையில் சுபோச உற்பத்தி அதிகரித்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. கம்பனியின் ஊழியர்களுக்கு உற்பத்தியை இலக்காகக் கொண்ட படியினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயிருந்தால் அது கம்பனியின் ஒட்டுமொத்த உற்பத்தி இலக்கினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அதற்காக முறையான ஒரு நடைமுறை தயாரிக்கப்பட்டு அதற்காக முறைப்படி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதுவும் அவதானிக்கப்பட்டது. | முன்மொழியப்பட்டது. உரிய எழுத்து மூல அங்கீகாரத்தினை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கம்பனியின் ஊழியர்களுக்காக இலக்கிடப்பட்ட படியினை வழங்குவது சுபோச இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டு என்பதனால் அதனை கம்பனியின் ஒட்டுமொத்த உற்பத்தி இலக்கினை அடிப்படையாகக் கொண்டு வழங்க முடியாது. இந்த இலக்கிடப்பட்ட படியினை வழங்குவது சம்பந்தமாக உள்ளக நடைமுறை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று அதனை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்படும். | முறையான நடைமுறையினைத் தயாரித்து முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | திறீபோச கம்பனியிடம் காணப்படுகின்ற களஞ்சிய வசதிகள் (ளுடைழ குயஉடைவைநைள) போதியளவு இல்லாததன் அடிப்படையிலும் ஒரே தடவையில் அதிக அளவான இருப்பினை கொள்வனவு செய்வதற்கு நிறுவனத்திடம் நிதி நிலைமை இல்லாமையாலும் மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கான உரிய கட்டளைகள் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன்இதன் காரணமாக பல்வேறு விலை வீச்சுக்குள் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. | தேவையான களஞ்சிய வசதிகளை விரிவுபடுத்தி நிறுவனத்தின் நிதி நிலைமை வலுவடைந்திருந்த போதிலும் சந்தையில் மூலப்பொருட்களுக்கான தட்டுப்பாடு அல்லது நாணய மாற்று வீதங்கள் நிலையற்றிருந்தும் தேவையான இருப்புக்களை ஒரே தடவையில் கொள்வனவு செய்ய முடியாதிருந்தது. அவ்வாறு இருந்தும் பல்வேறு விலை வீச்சுக்களின் கீழ் அடிக்கடி கொள்வனவு செய்யவேண்டியிருந்தது. | உற்பத்தி இலக்கினை அடிப்படையாகக் கொண்டு உச்ச அவு பொருளாதார நலன்கள் கிடைக்கும் வகையில் மூலபொருள் இருப்பினை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கம்பனியால் இறக்குமதி செய்த இறுங்குகளின் தரச்சான்றிதழினைப் பெற்றுக்கொள்ளும் வரை கம்பனி வளவில் அமைந்துள்ள களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்படுவதுடன் தரச்சான்றிதழுக்கு இணங்க இருப்பு பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்படுகையில் இறக்குமதியாளரால் அவற்றினை அகற்றுதல் இடம்பெறும். இறக்குமதியாளரின் களஞ்சியத்தில் இந்த இருப்புக்களை வைத்து ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் தரச்சான்றிதழிடப்பட்ட இருப்பினை மாத்திரம் கம்பனியின் களஞ்சியத்திற்கு எடுத்துவருதல் இடம்பெற வேண்டிய போதிலும் | கம்பனி இதுவரை இறுங்கு இருப்புக்களின் தரக்கட்டுப்பாட்டு நடைமுறையை மேற்கொண்டு வருவதாவது நிறுவன வளவுக்கு உரிய இருப்புக்கள் கிடைத்ததன் பின்னராகும். அதன் போது உரிய பொருள் விபரக் குறிப்பிற்கு இணங்க இருப்பு பொறுப்பேற்கப்படுவதுடன் பொருத்தமற்ற இருப்புக்கள் மீளத் திருப்பி அனுப்பிவைக்கப்படுகின்றன. இந்த நடைமுறையானது வழங்குனரின் களஞ்சியங்களில் மேற்கொள்ள முடியாததுடன் அது வழங்குனரின் களஞ்சியங்களில் | நிர்ணயிக்கப்பட்ட தரத்தைக் கொண்ட இருப்புக்களை வழங்குதல் வழங்குனரின் பொறுப்பு என்பதனால் நியமதரமற்ற இருப்புக்களக்காக கம்பனியால் மேற்கொள்ள வேண்டி ஏற்படுகின்ற அனைத்து செலவுகளையும் வழங்குனரிடமிருந்து அறவீடு செய்தல் |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுகின்ற நடைமுறைக்கு இணங்க கம்பனியின் களஞ்சியமானது இறக்குமதியாளரினை முன்னிட்டு ஒதுக்கீடு செய்யப்படுவதன் மூலம் அக்களஞ்சியத்தினை கம்பனியின் நடவடிக்கைகளுக்காக சிறப்பாக பயன்படுத்த முடியாதுள்ளது எனவும் இந்த இருப்பினை களஞ்சியத்துக்குப் பெற்றுக்கொள்வதற்காக ஊழியர்களுக்கு சம்பளம், மேலதிக நேர வேலைப்படி, மற்றும் ஏனைய படிகளைச் செலுத்த வேண்டி ஏற்படுகின்றது எனவும் இந்த இருப்பினை பேணுவதனை முன்னிட்டு பொதுச் செயற்பாட்டுக் கிரயத்தினை கம்பனியால் மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது. மேலும் தரப்பரிசோதனை செய்ததன் பின்னர் நல்ல தரத்தில் இல்லையாயின் மீண்டும் துரிதமாக அனுப்பிவைக்க வேண்டிய போதிலும் பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்ட இருப்புக்கள் வழங்குனரினால் களஞ்சியத்திலிருந்து எடுத்துச் செல்வதில் தாமதமும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே தரப்பரிசோதனை அறிக்கை கிடைக்கும் வரை கம்பனியின் களஞ்சியம் வழங்குனரினால் பயன்படுத்தப்படுதல் மற்றும் தரம் குறைந்த இருப்புக்கள் குவிக்கப்படுதல் மற்றும் பேணப்படுவதற்காக கம்பனிக்கு மேற்கொள்ள வேண்டிய செலவினை வழங்குனரிடமிருந்து அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இடம்பெறுவதன் மூலம் தேவையான நோக்கம் நிறைவேற்றப்படுவதில்லை. உரிய இருப்புக்களை குவித்து வைப்பதற்கு, இறக்கிவைப்பதற்கு மற்றும் சுத்தம் செய்வதற்குத் தேவையான ஊழியர்கள் வழங்குனரினால் ஈடுபடுத்தப்படுகின்றது. வழக்கமாக மேற்கொள்ள வேண்டிய பராமரிப்பு மற்றும் பொதுச் செயற்பாட்டுக் கிரயம் மாத்திரம் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த விடயத்தின் காரணமாக சில காலம் இறுங்கு இருப்புக்களை நிறுவனத்தில் வைத்திருக்க வேண்டி ஏற்படுகின்றது. | வேண்டும். |
| (உ) | உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தினால் (றுகுீ) உத்தேச சயிலோ முறைமையை நிர்மாணிப்பதற்காக ரூபா 192,091,525 மொத்த தொகை 2021 ஆம் ஆண்டில் பல தடவைகளில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது உரிய செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைத்த நிதி ஒரு ஆண்டிற்கு அண்மித்த காலம் கம்பனியின் நாளாந்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் கம்பனியிடம் காணப்பட்ட ரூபா 145,425,220 தொகையான நிலையான வைப்பு முதிர்ச்சியடைவதற்கு முன்னர் பணமாக மாற்றி அப்பணத்துடன் ரூபா 192,091,525 தொகை 2022 யூலை 01 ஆந் திகதி நிலையான வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | உலக உணவு அமைப்பினால் உரிய நிதி வழங்கப்பட்டதானது இறுங்கினை கொள்வனவு செய்வதற்கான ஒரு மானியமாகவாகும். கம்பனியின் வேண்டுகோளுக்கு இணங்க தேவைப்படுகின்ற சயிலோ முறைமையினை ஸ்தாபிப்பதற்கு நிதியினைச் சேகரிப்பதற்காக அந்த மானியத்தினைப் பயன்படுத்துவதற்கு உரிய அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் சயிலோ முறைமைக்கான மொத்த மதிப்பீடு ரூபா 500 மில்லியன் அளவில் இருந்ததனால் அச்செயற்பாட்டினை இன்னும் நிறைவேற்றிக்கொள்ள முடியாதிருந்தது. | எதிர்பார்த்த குறிக்கோளினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2022 மே 05 ஆந் திகதி கம்பனியின் மின் கடத்திக்காக பொருத்தப்பட்டிருந்த செம்பு நாடா காணாமல் போயிருந்தமை தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 792,500 நட்டம் 2023 மார்ச் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பாதுகாப்பு சேவையை வழங்குகின்ற நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 25(அ) பிரிவிற்கு இணங்க கம்பனிக்கு நட்டம் அல்லது இழப்பு ஏற்படுமாயின் அதற்காக அறவீடு செய்வதற்கு ரூபா 2 மில்லியன் பெறுமதியான காப்புறுதி கம்பனிக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மின்கடத்திக்காக பொருத்தப்பட்டிருந்த செம்பு நாடா கள்வர்களால் கழற்றி எடுத்துச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அந்த விசாரணைக்கு இணங்க ஏற்பட்ட நட்டத்தை பாதுகபாப்பு கம்பனியிடமிருந்து அறவீடு செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தது. இந்த மின் கடத்தி முறைமையை மீண்டும் ஸ்தாபிப்பதற்காக ரூபா 589,485 பணம் 2022 யூன், யூலை ஆகிய இரண்டு மாதங்களுக்கு கம்பனிக்கு செலுத்த வேண்டிய பணத்திலிருந்து கழித்துக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட நட்டம் முழுவதையும் திணைக்கள கட்டணத்துடன் அறவிட்டு அதுபற்றி கணக்காய்விற்கு உறுதிப்படுத்துதல் வேண்டும். |

## 3.4 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கம்பனி ரூபா 48,310,073 நட்டத்தை அடைந்திருந்தும் கம்பனியின் பிரதான இரண்டு உற்பத்திப் பொருட்களான திரிபோச மற்றும் சுபோச உற்பத்திகளுக்காக தனித்தனியாகத் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க திரிபோச உற்பத்தி தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 117,125,355 தேறிய நட்டமும் சுபோச உற்பத்தி தொடர்பாக ரூபா 68,815,282 இலாபமும் சுட்டிக்காட்டியிருந்தது. கம்பனி மேற்கொண்ட ஒட்டுமொத்த செலவுகளும் உழைத்த வருமானமும் கம்பனியின் பிரதான இரண்டு உற்பத்திப் பொருட்களுக்கிடையே உற்பத்தி சதவீதத்தின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படாது நிதிக்கூற்றுக்கள் தயாரித்ததன் காரணமாக மற்றும் திரிபோச உற்பத்திக் கிரயத்தினை கணிப்பீடு செய்வதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய கிரய கணிப்பீட்டு நடைமுறையானது பின்பற்றப்பட்டு அமைச்சிற்கு வழங்கப்படுகின்ற திரிபோச பணம் அறவிடப்படாமையால் சுபோச உற்பத்தி தொடர்பாக இலாபம் உழைக்கப்பட்டிருந்தது என்பது | திரிபோவில் யுகடயவழஒை உள்ளது என்பது பொதுமக்கள் சுகாதார உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட ஊடக வெளிப்படுத்தலுடன் உற்பத்தி செய்த திரிபோசவினை பகிர்ந்தளித்தலினை தற்காலிகமாக நிறுத்திவைக்க வேண்டி ஏற்பட்டதன் காரணமாக தொடக்க அரையாண்டில் திரிபோச உற்பத்தி தடைப்பட்டமை திரிபோச உற்பத்தியிலிருந்து நட்டம் அடைந்தமைக்கு காரணமாகும். 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட தீவிர பொருளாதார சிக்கல் மற்றும் அரசியல் ஸ்திரமின்மை ஆகிய விடயங்களின் காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் குறுங்கால ரீதியாக மாற்றமடைந்திருந்த போதிலும் அதனுடன் ஒப்பிடுகையில் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை விலைகளில் அடிக்கடி திருத்தம் செய்தலினை மேற்கொள்ள முடியாதிருந்தது. | திரிபோச மற்றும் சுபோச உற்பத்திகளுடன் உறுதியாக இனங்காணக்கூடிய செலவுகளும் வருமானங்களும் திரிபோச உற்பத்தி தொடர்பாக தனித்தனியாக இனங்காணப்பட வேண்டியதுடன் அவ்வாறு உறுதியாக இனங்காணமுடியாத அனைத்து செலவுகளும் வருமானங்களும் திரிபோச உற்பத்தி சதவீதத்தின் அடிப்படையில் பகிரப்பட்டு திரிபோச உற்பத்தி சம்பந்தமாக இலாபம் நட்டம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. திரிபோச மற்றும் சுபோச உற்பத்திகளுடன் உறுதியாக இனங்காணக்கூடிய செலவுகளும் வருமானங்களும் திரிபோச மற்றும் சுபோச உற்பத்திகள் தொடர்பாக தனித்தனியாக இனங்காணப்பட வேண்டியதுடன் அவ்வாறு உறுதியாக இனங்காணமுடியாத அனைத்து செலவுகளும் வருமானங்களும் திரிபோச மற்றும் சுபோச உற்பத்தி சதவீதத்தின் அடிப்படையில் பகிரப்பட வேண்டும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச் சட்டத்தின் 17(1) ஆம் பீவின் பிரகாரம் மக்களின் பயன்பாட்டிற்குப் பொருத்தமற்ற ஏதாவது உணவினை இறக்குமதி செய்து பகிந்தளிக்கப்படும் போது அதிகாரச் சட்டத்தின் செயற்பாடுகளுக்காக அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளராவதுடன் அதிகாரச்சட்டத்தின் 17 (2) ஆம் பிரிவின் பிரகாரம் தகமையுள்ள ஒரு நபரையும் அவ்வாறு நியமிக்க முடியும் எனக் காட்டப்பட்டிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கம்பனியால் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு மேலதிகமாக உணவு அதிகாரச் சட்டத்தின் கீழ் பெயரிடப்படாத தனியார் ஆய்வு கூடங்களின் மூலம் பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த இரண்டு நிறுவனங்களும் தற்பொழுது இலங்கையில் தானியம் மற்றும் தானியம் சார்ந்த உற்பத்திப் பொருட்களைப் பரீட்சிப்பதற்காக தகமைபெற்ற நிறுவனங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் இந்த இரண்டு நிறுவனங்கள் ஆய்வுகூட அறிக்கைகளை வழங்குவதற்கு சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களாகும். கம்பனியிடம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட களஞ்சிய இடவசிகள் காணப்படுவதனால் உரிய பரிசோதனை அறிக்கைகளை துரிதமாகப் பெற்று அந்த இருப்புக்களை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதா இல்லலையா என்பதனை தீர்மானித்தல் வேண்டும். | 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கம்பனியால் திரிபோச உற்பத்திக் கட்டிடத்தினை விரிவுபடுத்துவதற்குரிய ஒப்பந்தத்தின் ஆலோசனை செயற்பாட்டிற்காக சுகாதார அமைச்சின் சிவில் பொறியியலாளரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கான ஆலோசனை சேவைக் கட்டணமானது சுகாதார அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாது உரிய பொறியியலாளருக்கு ரூபா 424,817 நேரடியாகச் செலுத்தப்பட்டிருந்தது. | தாபன விதிக் கோவையின் ஐஓ ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் பிரிவின் பிரகாரம் இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | தாபன விதிக்கோவையின் இது தொடர்பான நிர்ணயிக்கப்பட்ட பிரிவும் உரிய அங்கீகாரமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இரண்டு சந்தர்ப்பங்களின் போது தொடக்க விசாரணைகளை மேற்கொள்வதற்காக அமைச்சின் புலனாய்வு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக கம்பனியால் ரூபா 55,000 கொடுப்பனவு நேரடியாக உரிய புலனாய்வு உத்தியோகத்தருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. | 18/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் செலுத்த வேண்டிய பணத்தினைவிட மிகவும் குறைந்த பணம் இந்த புலனாய்வு உத்தியோகத்தருக்குச் செலுத்தப்பட்டது. | உரிய அதிகாரம் என்ன என்பது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்காக பங்குபற்றும் போது போக்குவரத்துப் படிகள் செலுத்தப்படாதிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அவ்வாறான இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 72,000 போக்குவரத்து படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது. | கம்பனி ஜாஎல பிரதேசத்தில் அமைந்துள்ளதனாலும் அவர்களின் கடமைக்குப் புறம்பான செயற்பாடாக பணிப்பாளர்கள் சபைக் கூட்டங்களுக்குப் பங்குபற்றுவதனால் வருகை தருகின்ற துாரத்தின் அளவினைக் கருத்தில்கொண்டு ீநுனு 58 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 3,000 போக்குவரத்துப் படியானது ஒரு அங்கத்தவருக்குச் செலுத்தப்பட்டது. கம்பனியின் பணிப்பாளர் சபைக்காக நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களில் பலர் உத்தியோகபூர்வ அதிகாரத்தினால் நியமிக்கப்பட்ட நபர்களாகும். | உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்காக பங்குபற்றுவதற்கு போக்குவரத்துப் படிகள் செலுத்தப்படாதிருத்தல் வேண்டும். |
| (ஊ) | சுகாதார அமைச்சின் 111-02-16-1501 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட போசாக்கு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திறீபோச கம்பனியால் கர்ப்பினித் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் திறீபோச உற்பத்தி செய்யப்படுவதுடன் அதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுக்காக 2021 ஆம் ஆண்டிற்கு முன்னர் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்ட படிகளை மீண்டும் வழங்குமாறு 2021 மார்ச் 22 ஆந் திகதி சுகாதார அமைசின் செயலாளர் செலவு 1 இனால் திறீபோச கம்பனியின் தலைவருக்கு ஒரு கடிதத்தினை அனுப்பி வேண்டிக் கொண்டிருந்தார். அமைச்சு செயலாளரினால் மேற்கொள்ள வேண்டிய இந்த வேண்டுதல் மற்றுமொரு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் | திறீபோச இன்வொயிஸ்கள் தொடர்பாக கொடுப்பனவை மேற்காள்வதற்கு மற்றும் அவை சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சின் செலவு கை கிளையின் உத்தியோகத்தர்களால் திறீபோச நிறுவனத்திற்கு தொடக்க பங்களிப்பு வழங்கப்பட்டது. அதற்காக அதன் உத்தியோகத்தர்கள் சிலருக்கு மாத்திரம் மாதாந்த படியினை கொடுப்பனவு செய்தல் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு இந்த மாதாந்த படியினை வழங்குவதாகவிருந்தால் சுகாதார அமைச்சு செயலாளரின் முன் | பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள செலவு விடயத்தின் கீழ் கொடுப்பனவு செய்தல் தொடர்பாக படியினைச் செலுத்துவதற்காக அமைச்சு செயலாளரினதும் திறைசேரியினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு உத்தியோகத்தர்களின் விடயப்பரப்பின் கீழ் கொண்டு வரப்படுகின்ற சாதாரண கடமைகளுக்காக தனியான ஒரு படியினை சுகாதார அமைச்சு உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக கம்பனிக்கு வருடாந்தம் ரூபா 324,000 மேலதிக செலவினை மேற்கொள்ள வேண்டியிருந்தது. | அங்கீகாரத்தினைப் பெற்று திரிபோச கம்பனிக்குச் சமர்ப்பிக்குமாறு எழுத்து மூலம் கணக்காளர் செலவு ஐ இற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (எ) | திரிபோச உற்பத்திக்காக தேவையான உள்நாட்டு இறுங்குகளின் தட்டுப்பாடு காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட 2,500 மெட்ரிக் தொன் இறுங்குகளை வழங்குவதற்காக 2021 யூன் 07 ஆந் திகதி கட்டளை வழங்கப்பட்டிருந்தது. அக்கட்டளையின் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்ட இறுங்குகளை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு பொருத்தமானது என உறுதிப்படுத்துகின்ற ஆய்வுகூட பரிசோதனை அறிக்கை மூலம் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் கம்பனியின் களஞ்சியத்திற்கு பொறுப்பேற்காதிருக்க வேண்டிய போதிலும் 2021 நவம்பர் 04 ஆந் திகதி வரை 850 மெட்ரிக் தொன்களை கம்பனி பொறுப்பேற்று களஞ்சியப்படுத்தியிருந்தது. அந்த இறுங்குகள் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பொருத்தமானது என உறுதிப்படுத்தும் ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் அவற்றில் 700 மெட்ரிக் தொன்களை ஈடுபடுத்தி திரிபோச மற்றும் சுபோச உற்பத்தி செய்து பகிர்ந்தளித்தல் இடம்பெற்றிருந்தது. எனினும் பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுகூட அறிக்கையின் பிரகாரம் இந்த இறுங்கு இருப்புக்களை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துதல் பொருத்தமற்றது என உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. மிகுதியான 150 மெட்ரிக் தொன் இறுங்குகளை ஈடுபடுத்தி தயாரித்த திரிபோசவினை பகிர்ந்தளிப்பதற்கு முடியாமல் 2021 திசெம்பர் 31 இல் மிகுதியாகக் காணப்பட்டதுடன் இந்த இருப்பு 2022 சனவரி 20 ஆந் திகதி பணிப்பாளர்கள் சபை தீர்மானத்தின் பிரகாரம் 114,030 கிலோ கிராம் சுபோச என்ற பெயரில் மீண்டும் பொதி செய்து சந்தைக்கு வழங்குவதற்கும் 85,162.5 கிலோகிராம் தாய்மார்களுக்காக பொதி செய்யப்பட்டு 07 | 2021 நவம்பர் மாதம் வரை நிறுவனத்தினால் அதுவரை பேணிய தரக்கட்டுப்பாட்டு முறைமை மற்றும் பரீட்சிப்பின் பிரகாரம் உரிய இருப்புக்கள் களஞ்சியத்திற்கு பொறுப்பேற்கப்பட்டதுடன் அந்த இருப்புக்கள் களஞ்சியத்திற்கு பொறுப்பேற்க்கப்பட்டதுடன் அந்த இருப்புக்களை உற்பத்திக்கு ஈடுபடுத்தும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சிப்பு வரையறைகள் மற்றும் பொருள் விபரக் குறிப்பிற்கு உட்பட்டு உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டது. உற்பத்தி செயன்முறைகள் முடிவடையும் வரை இறக்குமதி செய்த இறுங்கு இருப்புக்கள் உற்பத்திக்கு பொருத்தமற்றது என தெரியப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் பின்னர் யுகடயவழஒைெ உள்ளது என தெரியப்படுத்தப்பட்டதோடு உரிய பூர்த்தியான மற்றும் பூர்த்தியடையாத இருப்புக்களை வழங்குவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இதுவரை எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட யுகடயவழஒைெ பரிசோதனையானது மேற்கூறிய சம்பவத்தின் பின்னர் கிடைக்கின்ற அனைத்து இறுங்கு இருப்புக்களுக்காகவும் மேற்கொண்டதன் பின்னர் பொருத்தமான இருப்பு உற்பத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுகின்றது. | இது சம்பந்தமாக முழுமையான முறைப்படியான புலனாய்வினை மேற்கொண்டு பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகங்களுக்கு 2022 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களின் போது பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தாய்மார்களுக்காக உற்பத்தி செய்து பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த திரிபோசவின் மொத்த அளவில் இரத்தினபுரி மாவட்டத்திற்காக வழங்கப்பட்ட 8,903.25 கிலோகிராம்கள் மீண்டும் கம்பனிக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்ததுடன் இந்த இருப்பு 2023 மே மாதமளவில் பயனற்றவைகளாக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | கம்பனியின் அமைப்பு புறவிதியின் பிரகாரம் உள்நாட்டு விவசாயிகளை வலுப்படுத்துவதற்காக திரிபோச உற்பத்திக்குத் தேவையான பிரதான இரண்டு மூலப்பொருட்களாகிய சோயா போஞ்சி மற்றும் இறுங்குகளை உள்நாட்டில் உற்பத்தி செய்கின்ற உற்பத்தி பொருட்களாக இருக்க வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் 2004 திமெம்பர் 31 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் உள்நாட்டு உற்பத்தியில் பற்றாக்குறை ஏற்படுமாகவிருந்தால் மாத்திரம் இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டில் உள்நாட்டு வழங்குனர் ஒருவரின் வாயிலாக கொள்வனவு செய்யப்பட்டிருந்த இறக்குமதி செய்யப்பட இறுங்குகளின் Aflatoxin மட்டமானது அதிகளவில் காணப்பட்டது என பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டதன் காரணமாக 2022 ஆம் ஆண்டில் மூன்று வழங்குனர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 20,011 பேக் அதாவது 1,000,550 கிலோ கிராம் இறுங்குகள் மீளத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தன. | உள்நாட்டு உற்பத்திகளை கொள்வனவு செய்தல் சம்பந்தமாக ஆராய்ந்து பார்ப்பதற்க்காக பல சந்தர்ப்பங்களில் வெளிக்களப் பயணம் மேற்கொண்டு இறுங்கு மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டன. அதன் போது அந்த இறுங்குகளில் நிர்ணயிக்கப்பட்ட அளவினை மிகைத்து Aflatoxin காணப்பட்டதனால் உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து இறுங்குகளை கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்தது. கால்நடை உணவுகளுக்குத் தேவையான இறுங்குகளை இறக்கமதி செய்தலினை அரசாங்கம் தடை செய்துள்ளதனால் செயள்ததோடு உள்நாட்டு இறுங்கு உற்பத்திகளை கால் நடை உணவுகளுக்கு விற்பனை செய்வதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டியதன் காரணமாக திரிபோச உற்பத்திக்காக கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்தது. | நியம தரமுள்ள இறுங்கு இருப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்க்கான ஒரு வேலைத்திட்டத்தினை விவசாய அமைச்சும் சுகாதார அமைச்சும இணைத்து தயாரித்தல் வேண்டும். |

**3.5 பயன் படுத்தப்படாத அல்லது குறைவாகப் கயன்படுத்தப்பட்ட ஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஊட்டச்சத்துள்ள பிஸ்கட் வகைகளை தயாரிப்பதற்காக ரூபா 209,274,588 கிரயமான ஒரு இயந்திரம் 2020 ஆம் ஆண்டின் போது கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இயந்திரத்தினை ஸ்தாபிப்பதற்காக ரூபா 18,979,438 தொகை மற்றும் உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்காக ரூபா 5,348,946 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது பிஸ்கட் தயாரித்தல் இடம்பெற்றிருக்காததுடன் பரீட்சித்துப் பார்ப்பதற்காக 11 சந்தர்ப்பங்களுக்காக ரூபா 523,027 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. இதற்கிணங்க இச் செயற்பாட்டிற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 234,125,999 தொகையான முழுச் செலவும் விளைவற்ற செலவாக மாறியிருந்தது. | 2021 ஆம் ஆண்டினைப் போல 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமை அரசியல் ஸ்திரமின்மை அதிகளவிலான பொருளாதார மற்றும் நிதிச் சிக்கல் மற்றும் நியம தரத்தைக் கொண்ட Aflatoxin குறைவான இறுங்குகளை உள்நாட்டினைப் போல வெளிநாட்டு சந்தைகளினாலும் வழங்கவதற்கு முடியாமையால் உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக திட்டமிட்டவாறு பிஸ்கட் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தன. | இது சம்பந்தமாக முழுமையாக முறைப்படியான விசாரணையை மேற்கொண்டு பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அனுராதபுரம் ஓயாமடுவ பிரதேசத்தில் 10 ஏக்கர் அளவிலான காணி மற்றும் 40,000 சதுர அடியான 02 ஆம் இலக்க களஞ்சியம் என்பன மஹவிலச்சி பிரதேச செயலாளரினால் கம்பனிக்கு நீண்டகால குத்தகையின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அக்காணியினை முறையாக அளவை செய்து பொறுப்பேற்குமாறு 2022 யூலை 06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கம்பனிக்கு தெரியப்படுத்தியிருந்தும் 2023 மார்ச் 17 ஆந் திகதி வரை அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இக்காணியையும் கட்டிடத்தையும் வழங்கும் பிரதான நோக்கம் இறுங்கு மற்றும் சோயா விளைச்சல் மிகையாகக் காணப்படுகின்ற காலத்தில் உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து அந்த உற்பத்திகளை குறைந்த விலைக்கு கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்காக வேண்டி இருந்த போதிலும் அது சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகளானது பணிப்பாளர்கள் சபையை உள்ளடக்கிய முகாமைத்துவத்தினால் எடுக்காமையின் | 2021 பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் திறீபோச உற்பத்தியினை அதிகரிப்பதற்குத் தேவையான மூலப் பொருட்களை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்தல் மற்றும் களங்சியப்படுத்தி வைப்பதற்கு ரூபா 1,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என தெரியப்படுத்தியிருந்தும் உண்மையில் அவ்வாறான நிதி ஏற்பாடு தேசிய பாதீட்டு திணைக்களத்திடமிருந்து கம்பனிக்கு கிடைக்காமையின் மூலம் உரிய களஞ்சியத்திற்கு பொருத்த வேண்டிய உலரவைக்கும் இயந்திரம் மற்றும் துப்பரவு செய்யும் இயந்திரத்தை பெறுகை செய்வதற்குத் தேவையான நிதி இருக்கவில்லை. பசளை சிக்கலின் காரணமாக இலங்கையில் பயிரிடப்பட்ட | இச்செயற்திட்டம் சம்பந்தமாக முழுமையான சாத்திய வள ஆய்வினை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அடிப்படையில் அக்காணியும் கட்டிடமும் விளைவற்றுக் காணப்பட்டன. அவ்வாறே இக்காணியும் கட்டிடமும் விளைவற்றுக் காணப்பட்டிருந்தும் குத்தகை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | இறுங்கு மற்றும் சோயா போதியளவிலும் சிறந்த தரத்திலும் கிடைக்கவில்லை. | |

## 3.6 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சுகாதார அமைச்சினால் திறீபோசவினை நிறுவனத்திற்கு வழங்கியிருந்த 04 வாகனங்களில் 02 வாகனங்கள் திருத்தம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் ஒரு வாகனம் 2018 யூன் மாதத்திலிருந்து திருத்தம் செய்வதற்கு முடியாத நிலைமையில் விளைவற்றுக் காணப்பட்டது. ஏனைய மோட்டார் வாகனங்கள் 2011 யூலை மாதத்தில் ஐக்கிய நாடுகளின் சுகாதார அமைப்பினால் வழங்கப்பட்டிருந்ததுடன் சுகாதார அமைச்சின் செயலாளரால் அவை இலங்கை திறீபோச கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தன. அவை இலங்கையில் பதிவு செய்யப்படாமையால் பயன்படுத்த முடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. அந்த வாகனங்கள் 10 ஆண்டுகள் நிறுவனத்திடம் காணப்பட்டதுடன் 57,649 கிலோ மீற்றகள் அளவில் ஓடியிருந்தன. அதன் காரணமாக இந்த வாகனங்கள் ஓடும் நிலையில் காணப்பட்டிருந்தும் விளைவற்ற ஒரு சொத்தாக நிறுவன வளவில் காணப்பட்டன. | இந்த கெப் வாகனம் இந்த நாட்டில் பதிவு செய்யப்படாததனால் செயற்படுத்த முடியாது என இலங்கை பொலிசின் போக்குவரத்துப் விரிவு தெரியப்படுத்தியிருந்த து. அதன் பின்னர் இந்த வாகனங்களை இந்நாட்டில் பதிவு செய்வதற்காக பல சந்தர்ப்பங்களில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தும் பதிவு செய்துகொள்வதற்கு முடியாதிருந்தது. பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாத இந்த வாகனங்களின் உரிமை சுகாதார அமைச்சிடம் உள்ளதுடன் வாகனங்களாக அல்லது எச்சப் பொருளாக விற்பனை செய்தல் கம்பனிக்கு முடியாதிருந்தது. அதனால் பல சந்தர்ப்பங்களில் சுகாதார அமைச்சின் பணிப்பாளருக்கு (போக்குவரத்து) தெரியப்படுத்தியிருந்தும் இன்றுவரை உரிய வாகனங்களை சுகாதார அமைச்சினால் பொறுப்பேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய வாகனங்களை திருத்தம் செய்வதற்கும் ஏனைய வாகனங்கள் சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டில் எதுவித உள்ளகக் கணக்காய்வு ஐய வினாவும் வழங்கப்படவில்லை. | கம்பனியை அரசாங்கம் பொறுப்பேற்ற சந்தர்ப்பத்தில் கம்பனியின் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவி மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அது எவ்வகையிலும் தற்போதைக்கு போதியதில்லை ஆகக் குறைந்தது கம்பனிக்கு ஒரு உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரும் அவருக்கு உதவி செய்வதற்கு ஆகக் குறைந்தது இன்னும் 02 உத்தியோகத்தர்களும் தேவையாக உள்ளனர. | வருடாந்த உள்ளகக் கணக்காய்வினை திட்டமிட்டு அமுல்ப்படுத்த வேண்டியதுடன் வழங்கப்படுகின்ற உள்ளகக் கணக்காய்வு ஐய வினாக்களின் அல்லது அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |